## SUBORDINATE COURT, UTHANGARAI

| | | |
|---|---|---|
| **Original Suit No.** | : | **MCOP.No. 107 /2022** |
| **Deposition of witness for** | : | **Respondent** |
| **Serial No. of Witness** | : | **RW.1** |
| **Name** | : | **திரு.சீனிவாசன்** |
| **Father/Husband Name** | : | **திரு.பெருமாள்** |
| **Village** | : | **ஜிங்கல் கதிரப்பட்டி** |
| **Taluk** | : | **போச்சம்பள்ளி** |
| **Age** | : | **34** |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 17th June - 2025** | | |

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமத்தில் நான் ஜே.சி.பி வாகனம் ஓட்டினேன். அதன் பதிவு எண் TN. 24 J 3312 ஆகும். பேப்பர் மில் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். சம்பவத்தன்று JCB எடுத்துக்கொண்டு ஓலைப்பட்டி கம்பெனியில் கேட்டில் வந்து வலது புறம் செல்வதற்கா நிறுத்தி பின்னாடி பார்த்தேன். அப்போது பின்னால் வண்டி எதுவும் வரவில்லை. இடது புறமும் பார்த்தேன். வண்டி எதுவும் வரவில்லை. நான் JCB வண்டி வலது புறம் மெதுவாக திருப்பி ரோட்டின் முக்கால் வாசி சென்ற போது பின்னாடி இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் எனது வாகனத்தை வலைத்து கடந்துவிடலாம் என்று எனக்கு முன்னாடி வந்து சென்றுவிடலாம் என்று வலது புறம் ஏறி வந்தபோது JCB பக்கேட்டில் மோதிவிட்டார்கள். கீழே விழுந்து விட்டார்கள் அவர்களை எழுப்பி தண்ணீர் கொடுத்தேன். இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தலை கவசம் அணியவில்லை. விபத்து நடந்த தேதியில் எனக்கு Batch இல்லை. என்னுடைய பழைய ஓட்டுனர் உரிமம் நகல் எ.மா.சா. ஆ. 1 ஆகும். விபத்து

மனுதாரரின் கவனக்குறைவாள் ஏற்பட்டது. மனுதாரர்கள் எவ்வாறு வந்தார்கள் என்றால் என்னால் சொல்ல இயலவில்லை. சாட்சி மீண்டும் வேகமாக வந்ததாக கூறுகிறார்.

குறுக்கு விசாரணை

JCB மொத்த நீளம் எவ்வளவு என்றால் தெரியாது. 26 அடி என்றால் தெரியாது. ரோடின் அகலம் எவ்வளவு என்றால் 10 அடியை விட அதிகமாக இருக்கும். அதில் தார் ரோடு எவ்வளவு இருக்கும் என்றாலும் மண் ரோடு எவ்வளவு இருக்கும் என்றாலும் எல்லாம் தார் ரோடு தான். வண்டி ஓட்டும் போது பக்கேட்டை எவ்வளவு உயரத்தில் வைத்து ஓட்டுவோம் என்றால் 3 அடி அளவில் வைத்து ஓட்டுவோம். பக்கேட்டின் அகலம் எவ்வளவு என்றால் 2 1/2 மீ ஆகும். உயரம் 2 அடி இருக்கும். மேற்படி பக்கேட்டின் பற்கள் முன் பகுதியில் தான் உள்ளது என்றால் சரிதான். பின்னால் உள்ள பக்கேட்டு எவ்வளவு உயரத்தில் வைத்து ஓட்டுவோம் என்றால் 4 அடி ஆகும். மேற்படி பக்கேட்டுகளில் ஒளிரும் தகடு ஒட்டுவதில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இருட்டு என்றால் பாதி இருட்டாக இருந்தது. நான் மனுதாரர் வகனத்தில் வருவதை பார்க்காமல் வேகமாக சென்று JCB யை திருப்பியதால் தான் விபத்து எற்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் எந்த பகுதி பக்கேட்டின் பற் பகுதியில் மோதியது என்றால் பெட்ரோல் டேங்க் ஆகும். நான் வண்டியை திருப்பும் போது இருசக்கர வாகனத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பார்த்த போது வரவில்லை. நான் மனுதாரர்கள் தான் வேகமாக வந்து மோதிவிட்டார்கள் என்று காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர்கள் தகப்பனார் நான் வகனத்தை வேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினேன் என்று கொடுத்த புகாரின் பேரில் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அஜக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி மனுதாரர்களுக்கு காயம் ஏற்படுத்திவிட்டு நஷ்ட ஈடு கொடுப்பதை தடுப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 20.07.2015 தேதி கனரக வாகனம் ஓட்ட பேச் போட்டேன் என்றால் சரிதான். எனது ஓட்டுனர் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் ஓட்டுனர் உரிமம் **ம.சா.ஆ. 13** ஆகும். வகனத்தை ஆய்வு செய்த போது மோட்டார் வாகன ஆய்வாளரிடம் எனது உரிமத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்தேன். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்கள் தலைகவசம் அணிந்து வந்தார்கள்

என்றாலும் நான் வழக்கிற்காக தலைகவசம் அணியவில்லை என பொய்யாக கூறுகிறேன்  என்றால் சரியல்ல.

ஒம்/-  திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.